**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண். 004775/ H1 / 2022** **நாள் :04.05.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – தொழிற்கல்வி தேர்வுகள் – பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மே 2022 – தொழிற்கல்வி தேர்வுகள் நடைபெறும் தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாள்கள் மற்றும் முகப்புத்தாள்கள் வழங்குவதற்கான அறிவுரை வழங்குதல் – சார்பு.

*********

மே 2022, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுடன் தொழிற்கல்வி பாடங்களுக்கான தேர்வுகள் எழுதவுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதன்மை விடைத்தாள்கள், முகப்புத்தாள்களை உதவி இயக்குநர்கள் கீழ்க்காண் நாட்களில் சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு வழங்கி தைக்கும் பணியினை மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான தொழிற்கல்வி தேர்வுகள் நடைபெறும் 188 பள்ளிகளின் விவரங்களும், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான தொழிற்கல்வி தேர்வுகள் நடைபெறும் 67 பள்ளிகளின் விவரங்களும் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு **SSLC** என உள்ள 30 பக்கங்கள் கொண்ட முதன்மை விடைத்தாள்களையும், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு **HSE MAIN** என்று குறிப்பிட்டுள்ள 30 பக்கங்கள் அடங்கிய முதன்மை விடைத்தாள்களையும் இத்துடன் இணைத்தனுப்பப்படும் பட்டியலில் உள்ள பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப 14.05.2022–க்குள் வழங்கிட வேண்டும்.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தொழிற்கல்வி பாடத் தேர்வெழுத உள்ள மாணவர்களுக்கான முகப்புத்தாள்களை அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிக்கான User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி 09.05.2022 பிற்பகல் பதிவிறக்கம் செய்து கொள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு உதவி இயக்குநர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வகுப்பு | முதன்மை விடைத்தாட்கள் வகை | முதன்மை விடைத்தாட்கள் சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு வழங்க வேண்டிய நாட்கள் | தொழிற்கல்வி பாடத்திற்கான முகப்புத்தாள்களை பள்ளி தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | SSLC என குறிப்பிட்டுள்ள 30 பக்கங்கள் அடங்கிய முதன்மை விடைத்தாள்கள் | 14.05.2022–க்குள் | 09.05.2022 பிற்பகல் முதல் |
| மேல்நிலை இரண்டாம் ஆண்டு | **HSE MAIN** என்று குறிப்பிட்டுள்ள 30 பக்கங்கள் அடங்கிய முதன்மை விடைத்தாள்கள் | | |

மேற்படி, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான தொழிற்கல்வி தேர்வுகளுக்கென வழங்கப்பட்ட முதன்மை விடைத்தாள்கள் மற்றும் பதிவிறக்கம் செய்யப்பட்ட முகப்புத்தாள்களுடன் இணைத்து தைத்து முடித்திட சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு** : 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான பள்ளிகள், மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடப்பிரிவு விவரங்கள்

**ஒம்./–**
**இயக்குநர்**

**நகல் :**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காக வழங்கப்படுகிறது.